பிரைம்கிராமின்
# மெஹெவர
இருள் நீக்கும் உன்னத பணி
3 ஆம் தொகுதி - ஆறாவது இதழ் - 2015 ஜனவரி



திருமதி பீ. நிர்மலா பிரியதர்ஷினி
பிரைம் கிராமின் அம்பாறை கிளை அங்கத்தவர்
படப்பிடிப்பு: லக்ஷ்மன் குமாரதுங்க




# எனது எஸ்.ஐ. கனவு அப்போதே களைந்து போனது ...

சுஜித் குமார - பிரதேச முகாமையாளர்
கொழும்பு பிரதேசம்

**முழுப் பெயர் :** ஈஸ்ராவாவிகே சுஜித் குமார

**பிறந்த திகதி:** 1980.08.29

**நீங்கள் கல்விகற்ற பாடசாலைகளில் விருப்பமான பாடசாலை:** நான் இரண்டு பாடசாலைகளில் கல்வியைத் தொடர்ந்தேன். சாதாரண தரம் வரை மஹவில கனிஷ்ட பாடசாலையிலும், உயர்தரத்தை பாணந்துறை றோயல் கல்லூரியிலும் கல்வி கற்றேன். எனக்கு இவ்விரு பாடசாலைகளிலும் மிகவும் விருப்பமான பாடசாலை மஹவில கனிஷ்ட பாடசாலையாகும். அதற்கான காரணம் நான் அப்பாடசாலையிலேயே கூடுதலான காலம் கல்வி கற்றதனாலாகும். அத்துடன் அது ஒரு கலவன் பாடசாலையாகும். இதனால், அப்பாடசாலையில் பல மறக்க முடியாத சம்பவங்கள் பல எனது வாழ்வில் இடம்பெற்றன எனலாம்.

**பாடம்:** எனக்கு கணித பாடம் மிகவும் பிடித்தமான பாடமாகும்

**விளையாட்டு:** சாதாரண தரம் வரை மெய்வல்லுநர் போட்டிகளில் ஆர்வம் காட்டினேன். உயர்தர கற்றுக் கொண்டிருந்த போது நான் றகர் போட்டிகளில் அதிக ஆர்வத்துடன் விளையாடினேன்.

பாடசாலைக் காலத்தின் போது எதிர்கால இலட்சியமாக காணப்பட்டது: பொலிஸ் சேவையில் குற்றத்தடுப்பு திணைக்களத்தில் உப பொலிஸ் கான்ஸ்டபிளாக (CID) வரவேண்டுமென்ற ஆசை சிறு வயது முதல் காணப்பட்டது. 2000ஆம் ஆண்டு தொழிலுக்காக விண்ணப்பித்து (உயர்தர பரீட்சையின் பின்) நேர்முகப் பரீட்சைக்கு தோற்றி முதல் 50 பேருக்கான பட்டியலில் இடம்பெற்றிருந்தேன். இந்த சந்தர்ப்பத்தில் நாட்டில் ஆட்சிமாற்றம் ஒன்று உருவாக்கப்பட்டு அன்றைய பொலிஸ்மா அதிபர் பதவி விலகியதை அடுத்து அரசியலில் மாற்றங்கள் ஏற்பட்டன. அதன் பின்னர் எமது தொழில்வாய்ப்பும் பறிபோனது. எனது SI கனவும் தவிடுபொடியானது.

**முதல் தொழிலை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட அனுபவம்:** முதல் தொழிலை பெற்றுக் கொள்வதில் அந்தளவு சிரமங்களை எதிர்நோக்கவில்லை. ஏனெனில் நான் சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய பின்னரே தொழில் ஒன்றில் ஈடுபட்டிருந்தேன். உயர்தரம் கல்வி கற்ற பின்னர் அந்தத் தொழிலை தொடர்ந்து முன்னெடுக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் மூன்று, நான்கு வருடங்கள் பல்வேறு நிறுவனங்களில் தொழில் புரிந்த அனுபவம் எனக்கு கிடைத்தது. இதன் போது பிரதேச முகாமையாளர் சமிந்த சம்பத் அர்களின் ஊடாக பிரைம் கிராமின் நிறுவனத்தில் நிறைவேற்று உத்தியோகத்தராக இணைந்து கொண்டேன்.

**கிராமின் நிறுவனத்தில் மறக்க முடியாத சம்பவங்கள்:** மறக்க முடியாத சம்பவங்கள் பல உள்ளன. திடீரென்று எனது ஞாபகத்து வரும் சம்பவமான, ஒரு நாள் மாலை எமது அங்கத்தவரின் வீட்டுக்கு கடன் வசூலிப்பிற்காக சென்றிருந்தோம். நான் அப்போது கடன் வசூலிப்பவராகவே பணியாற்றினேன். நாங்கள் வீட்டுக்கு சென்ற போது அங்கத்தவர் வீட்டில் இருக்கவில்லை. நாம் வந்த நோக்கத்தை அவருடைய கணவருக்கு விபரமாக எடுத்துக் கூறிய போது கோபமடைந்த அவர் கத்தியொன்றுடன் எம்மைத் தாக்க வந்தார். எமக்கு ஓடுவதற்கு சந்தர்ப்பம் இருந்ததால் தப்பித்தோம். அந்த மனிதருக்கு மனநிலை சரியில்லை என்பது பின்னர் எமக்கு தெரியவந்தது.

**வாழ்க்கையில் சந்தோஷமான நிகழ்வும் துக்கமான தினமும்:** எனக்கு பெண் குழந்தை பெற்ற நாள் எனது வாழ்வில் மிகவும் சந்தோஷமான தினமாகும். அவ்வாறே நான் உயர்தர வகுப்புக்கு வேறு பாடசாலைக்கு செல்ல வேண்டியேற்பட்ட போது அந்தப் பாடசாலையில் இருந்து விலகிய அந்த நாள் எனக்கு மிகவும் துக்கமான தினமாகும்.

**இளமைக்காலத்துக்கு செல்வதற்கான சந்தர்ப்பம் மீண்டும் கிடைத்தால் நீங்கள் தெரிவு செய்யும் விருப்பமான காலமும் அதற்கான காரணமும்:** பாடசாலைக்காலத்தில் தரம் 9 முதல் 11 வரையான காலப்பகுதியே எனது வாழ்வில் மிகவும் சந்தோஷத்துக்குரிய காலங்களாக கருதுகிறேன். இனிமையாகவும் சந்தோஷமாகவும் வாழ்க்கையை செலவழித்த அந்தக் காலப்பகுதி மீண்டும் கிடைப்பதில்லை.

கிராமின் நிறுவனத்தில் சேவையாற்றும் சிறந்த கிளை முகாமையாளரை தெரிவு செய்வதற்கான ஐவர் கொண்ட நீதிக் குழாமில் உறுப்பினர் பதவி உங்களுக்கு கிடைக்கப் பெற்றால் நீதியை வழங்கும் அந்த சந்தர்ப்பத்தில் எவ்வாறான குண இயல்புகளை அவர்களிடம் இருந்து எதிர்பார்ப்பீர்கள்?

1. தமக்கு கீழ் பணியாற்றும் ஊழியர்களிடத்தில் அன்பு காட்டும் தலைமைத்துவத்தை கொண்டிருக்க வேண்டும்.
2. கூடி ஆராய்ந்து தீர்மானம் எடுக்கும் நபராக இருத்தல்
3. கொடுக்கப்பட்ட இலக்கை அடைவதில் மும்முரமாக செயற்படல்.

**தெய்வ ஆசியுடன் மூன்று வரங்கள் கொடுக்கப்பட்டால் நீங்கள் கேட்பது:** நான் செய்த செயற்பாடுகளில் சில குறைகள் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளன. மீண்டும் அந்த இடத்துக்கு சென்று அந்தப் பணிகளை சரியாக செய்வதற்கு கடவுளிடம் வரம் கேட்பேன்.

நான் தொழிலில் பற்றுள்ளவன். அவ்வாறே முன்கோபம் கொண்டவன். அந்த முன் கோபத்தை கட்டுப்படுத்த வரம் கேட்பேன்.

தற்போது இருக்கும் நிலையை விட சமுகத்தினதும், எனது குடும்பத்தினதும் பொருளாதாரத்தை உயர்த்துமாறு வரம் கேட்பேன்.

**மாற்றியமைப்பதற்கான சந்தர்ப்பம் ஒன்று உருவாகினால் உங்களிடம் காணப்படும் குறைபாடுகள்:** ஒரு விடயத்தை செய்து முடித்த பிறகு அதைப்பற்றியே யோசித்து கவலைப்படுவதுண்டு. அதனை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று நினைக்கிறேன்....

நாட்டில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நிறைவேற்று அதிகாரம் உங்களிடம் கையளிக்கப்பட்டால் முதலில் நடைமுறைப்படுத்தும் சட்டம் எது? சமூக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக நாட்டின் நீதித்துறையின் செயற்பாடு போதுமானதாக இல்லையென்பதே எனது கருத்து. அவ்வாறே இருக்கும் சட்டமானது நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு குளறுபடிகள் காணப்படுகின்றது. நீதியை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் நடுநிலை பேணி செயற்படுவதற்கான சட்ட மறுசீரமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

**உங்களுடைய முதல் காதல் உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கம்:** சாதாரண தரம் பரீட்சையின் பின்னர் பெண்ணொருவர் காதலிப்பதாக கூறினார். அவள் தொடர்பாக நானும் ஒருதலைப்பட்சமாகவே அன்பு வைத்திருந்தேன். பின்னர் இருவரும் காதலித்தோம். என்றாலும் எமது காதல் நீண்டகாலம் நிலைத்திருக்கவில்லை. 2002ஆம் ஆண்டிலேயே நான் உண்மையிலேயே காதலிக்க ஆரம்பித்தேன். அப்போது ...ன் தொழில் புரிந்துக் கொண்டிருந்தேன். அவள்தான் நதீக்கா கீதாஞ்சலி பெர்ணாந்து. தற்போது அவள் எனது மனைவி.

உங்களுக்கு பிடித்த
**பாடகர்:** எச்.ஆர். ஜோதிபால

**பாடல்:** ஒரு பாடல் என்று கூற முடியாது
திரைப்படம்: செலியூலர்

**நாவல்:** எனது மனைவி எழுதிய புத்தகம் “நெது கந்துலு” அந்த நாவலை விரும்பி வாசிப்பேன்

**எதிர்கால இலட்சியம்:** தனிநபர் வாழ்வில் சொகுசான வீட்டுடன் சந்தோஷமாக வாழ்வதேயாகும். தொழில் என்ற அடிப்படையில் உயர்பதவிகளைப் பெற்று நிறுவனத்துக்கு தங்களாலான சேவைகளை செய்வதாகும்.




ஆக்கம்
மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி

**வேலைக்கு செலவழித்த நேரத்தை உணர்ந்து விரைவாக செயல்பட பழகுங்கள்**

# பிரைம் கிராமின் நிறுவனம் "Asia's Most Promising Brand 2014" விருதினைப் பெற்றுக் கொண்டது







நுண் நிதித் (சிறுகடன்) துறையின் முன்னோடி நிறுவனமான பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவனம் நுண் நிதித்துறைக்கு வழங்கி வரும் பங்களிப்பினை கௌரவிக்கும் வகையில் உலக ஆலோசனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தினால் (World Consulting and Research Corporation - WCRC) 2014 ஜனவரி மாதம் 12ஆம் திகதி நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் Asia's Most Promising Brand 2014 விருதினை பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவனம் பெற்றுக் கொண்டது.

ஹட்டன் நஷனல் வங்கியின் இணை நிறுவனமான பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் சமிந்த பிரபாத் அவர்கள் "WCRC Leader of The Year 2014"(Game Changer of The Year 2014 –Business) விருதினைப் பெற்றுக் கொண்டதுடன் மேற்படி விருது வழங்கல் நிகழ்வில் பிரைம் கிராமின் நிறுவன உதவிப் பொது முகாமையாளர் ரமேஷ் பொன்சேகா அவர்களுக்கு Diverse Continent, Dynamic Possibilities, and marketing Challenges in Asia நிறுவனம் தொடர்பான கலந்துரையாடல் குழுவில் அங்கம் வகித்தார்.

"Asia's Most Promising Leader **2014**" விருது வழங்கும் விழா இந்தியாவில் உள்ள World Counseling and Research Corporation (WCRC) நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெற்றதுடன் இந்நிறுவனம் ஐக்கிய அரபு இராச்சியத்திலும், சிங்கப்பூர் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் கண்காணிப்பு மற்றும் ஆலோசனை வழங்கும் நிறுவனங்களாக பிரசித்தி பெற்றுள்ளன.

அவ்வாறே பல்வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபடும் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 150 நிறுவனங்கள் விருது வழங்கும் நிகழ்வில் பங்குபற்றின. இலங்கையின் நுண் நிதி (சிறிய கடன்) நிதி நிறுவனமொன்று முதல் தடவையாக இந்த விருதினைப் பெறுவது இதுவே முதற்தடவையாகும்.

இதற்கு மேலதிகமாக, இந்த விருதுக்காக ஆசியாவிலுள்ள 15,000இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்துடன் இரண்டு முறையில் கண்காணிக்கப்பட்டு வந்தன. முதல் பகுதியில் நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பில் முகாமைத்துவ சபையினால் முழுமையாக கண்காணிக்கப்பட்டது. இரண்டாவது பகுதியில் பல்வேறு விடயப்பரப்புடன் தொடர்புள்ள பிரசித்தி மற்றும் நன்மதிப்பைப் பெற்ற கண்காணிப்பாளர்களினால் நிறுவன செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டன. இவ்விரு கண்காணிப்பிலும் புள்ளிகள் வழங்கப்பட்டன. முதலாம் மற்றும் இரண்டாம் கண்காணிப்பில் பெறப்பட்ட புள்ளிகள் இந்தியாவில் உள்ள KPMG நிறுவனத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டு 2014ஆம் ஆண்டுக்கான இறுதி 150 பேர் கொண்ட நிறுவனம் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டது.

# பிரைம் கிராமின் கிளையின் செயற்பாடுகள்




வரலாற்றுச் சிறப்புகள் பலவற்றைக் கொண்டுள்ள திகாமடுல்ல, அந்த பழைமை வாய்ந்த சிறப்புகளுக்கு பொறுப்புடன் இன்றும் மௌனமாக இருந்து மகத்தான சேவையை நாட்டுக்கு வழங்கி வருகிறதென்பதை நாம் பெருமையாக கருதுகிறோம். பார்க்கும் இடங்களிலெல்லாம் பச்சைப் பசேலென காணப்படும் நெற்கதிர்களையும் ஒளிமயமான தோற்றத்தைக் கொண்ட வயல்நிலங்களுக்கு சொந்தமான மக்களின் வியர்வை மனத்தினால் இதயம் நிறைவு பெறுகின்றது. கருமையான ஒரு திரைச்சீலையைப் போல் தூரத்தில் தோற்றம் தரும் கொழும்பு அம்பாறை நெடுஞ்சாலையின் ஒரு கிலோமீற்றருக்கு இடையில் காணப்படும் மின்கம்பங்கள் எமது பயணத்தை நிறைவு செய்யும் வரை, எமது பேச்சு மௌனித்திருந்தமையை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அம்பாறை கிராமின் கிளை 13ஆண்டுகளுக்கு முன்னர் 2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அம்பாறை நகர மத்தியின் 4ஆம் வீதியில் 3இலக்கத்தில் கிளை அலுவலகம் திறக்கப்பட்டது. பிரைம் கிராமின் நிறுவனத்தின் 7வது கிளையான அம்பாறை கிளையின் பொறுப்புகளை எம்முடன் பகிர்ந்தளிப்பதற்காக அக்கிளையின் முகாமையாளரான அரவிந்த அகலங்க டி சில்வா அவர்கள் பிரைம் கிராமின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்டார். அவர் மற்றும் அவருடைய அலுவலக ஊழியர்களின் அர்ப்பணிப்பு தொடர்பாக எங்களிடம் தெரிவித்த கருத்துக்களை கீழே தருகின்றோம்.

அம்பாறை என்பது வியாபாரம் பலவற்றை மேற்கொள்ளும் மத்திய பிரதேசமாக கருதப்படுகிறது. அம்பாறையில் கூடுதலாக விவசாயமே மேற்கொள்ளப்படுகிறது. விசேடமாக நெல், கன்றுகள் உட்பட இந்தப் பிரதேசத்தில் காணக்கூடிய வியாபாரங்களில் சிலவாகும். அவ்வாறு கடற்தொழில், மிருக வளர்ப்பு, (கோழி, மாடு) அரிசி விற்பனை (சோளம், மரக்கறி) தைத்த ஆடையுடன் தொடர்புடைய உற்பத்திகள், தானியங்கள் பெக்கட் செய்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகள் மற்றும் சில்லறைக் கடை, ஆகியன பிரதானமாகும்.

எமது அங்கத்தவர்கள் மேற்படி உற்பத்திகள் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவ்வாறே எமது கிளைகள் இப்பிரதேசத்தில் பரந்து காணப்படுகின்றது. நிறுவனம் என்ற வகையிலும் கிளை என்ற வகையிலும் அம்பாறை பிரதேசத்தில் கடந்த 12 வருடத்தை நெருங்கியுள்ள கிராமின் கொள்கையானது சிறப்பானதென்பதை சகலருக்கும் வெளிப்படுத்திய பிரதான நுண் நிதியக் கம்பனி என்ற பெருமை எம்மிடம் காணப்படுகிறது. விசேடமாக உறுப்பினர்கள் கேட்கும் கடன் தொகைக்கு மேலதிகமாக அவர்களுக்கு தேவையான மற்றும் கேட்கும் கடன் தொகையை மாத்திரம் கணிப்பீடு செய்து வழங்கும் பிரதான நிதி நிறுவனமாக பிரைம் கிராமின் நிறுவனம் மாற்றமடைந்துள்ளது. விசேடமாக நிறுவனத்தின் பெயரைக் கேட்டவுடன் இந்தத்துறையுடன் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்கள் மற்றும் எமது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக எமது அங்கத்தவர்கள் நன்கு அறிவார்கள்.

இதனால், கடன் தொகையை திருப்பிச் செலுத்தாதவர்களின் எண்ணிக்கை ஒற்றை இலக்கமாக தொடர்ந்து பேணிவரும் கிளையாக இன்றுவரை செயற்பட்டு வருகின்றோம்.

எமது கிளை உத்தியோகத்தர்கள் அறுபது முதல் எழுபது கிலோமீற்றர் தூரத்தில் உள்ள அங்கத்தவர்களின் குடும்பங்களுக்கு எம்மால் முடியுமான சகல சேவைகளையும் பெற்றுக் கொடுத்துள்ளோம். இது நடைமுறையில் சாத்தியமற்ற விடயமாகும். இதனால், பொத்துவில் போன்ற அம்பாறையில் இருந்து நீண்ட தூரத்தில் இருக்கும் பிரதேசங்களுக்கு எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

## அம்பாறை கிளை ஊழியர் சபை

**பிரதேச முகாமையாளர்**
பிரியந்த திஸாநாயக்க
**கிளை முகாமையாளர்**
அரவிந்த டி சில்வா
**உதவி முகாமையாளர்**
எஸ்.எம். சந்திரசேன
**கிளை பிரதான கணக்காளர்**
சாந்த செனவிரத்ன
**பிரிவு முகாமையாளர்**
நுவன் தமித்
**நிறைவேற்று உத்தியோகத்தர்கள்**
ரங்கநாத் தஸநாயக்க
ரசிக்க சம்பத்
பியல் நந்தன விஜேசிங்க
ரோஹன பெர்ணாந்து
தரங்க உதயகுமார
பீ. சஞ்சித்
கே. ஜெயகுமார்
ரி. தவனேஸ்வரன்
**கணக்கு உதவியாளர்கள்**
தினூஷா கேஷாணி
ரகீப் மொஹமட்
சத்துரங்க
**சேமிப்பு உத்தியோகத்தர்**
டிலங்க நிரோஷன்

## பொத்துவில் சேவை மத்திய நிலைய ஊழியர்கள்

**உதவி முகாமையாளர்**
உபுல் சாந்த குமார
**பிரிவு முகாமையாளர்**
தர்மசோக டி சில்வாசிரேஷ்ட
**கணக்கு உதவியாளர்**
ஜயசிறி பண்டார
**நிறைவேற்று உத்தியோகத்தர்கள்**
கபில செனவிரத்ன
அப்துல் ரவூப் மொஹமட்
வந்த குமார
துஷார ஹேஷான்
என். வசீஸன்
மொஹமட் பாரூக்
**கணக்கு உதவியாளர்**
பிரபாத் குமார

பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்
இல. 27, சுதந்திர மாவத்தை,
அம்பாறை.
தொலைபேசி: 0632224379
மின்னஞ்சல் :
ampara@primegrameen.lk

ஆக்கம்
மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படப்பிடிப்பு
லக்ஷ்மன் குமாரதுங்க

## கிராமின் கொள்கையானது சிறப்பானதென்பதை சகலருக்கும் வெளிப்படுத்திய பிரதான நுண் நிதியக் கம்பனி என்ற பெருமை எம்மிடம் காணப்படுகிறது

பிரைம் கிராமின் அம்பாறை கிளை


பிரைம் கிராமின் அம்பாறை கிளை அங்கத்தவர்கள்


பிரைம் கிராமின் பொத்துவில் மத்திய நிலைய ஊழியர்கள்


பிரியந்த திஸாநாயக்க
பிரதேச முகாமையாளர்


அரவிந்த டி சில்வா
கிளை முகாமையாளர்


எஸ்.எம். சந்திரசேன
உதவி முகாமையாளர்


உபுல் சாந்த குமார
உதவி முகாமையாளர்


நுவன் தமித்
பிரிவு முகாமையாளர்


தர்மசோக டி சில்வா
பிரிவு முகாமையாளர்


சாந்த செனவிரத்ன
கிளை கணக்கு பிரதானி


ஜயசிறி பண்டார
கணக்கு உதவியாளர்

**தலைவரின் கூற்றுக்குப் பிறகு உங்களின் கருத்துக்களை தெரிவிக்கவும்**

குறிப்பாக இந்தப் பிரதேசத்தில் உள்ள அங்கத்தவர்களின் வியாபாரத்தை முன்னேற்றுவதற்கும், புதிதாக வியாபாரமொன்றை ஆரம்பிப்பதற்கும் தேவையான கடன் வசதி மற்றும் ஆலோசனைகளை இலகுவாக பெற்றுக் கொடுக்க அம்பாறை கிளையின் கீழ் இயங்கும் பானம மத்திய நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது. இன்று வரை எமது அம்பாறை கிளைக்கு 192 (பானம மத்திய நிலையம் உட்பட) மத்திய நிலையங்களின் 7026 அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் வியாபாரத்துக்காக வழங்கப்பட்டுள்ள மொத்த கடன் தொகை 584 மில்லியன் ரூபாவாகும். அம்பாறை கிளையின் செயற்பணிகள் மத்திய நிலையங்கள் ஊடாக பாரிய அளவில் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. அம்பாறையில் இருந்து கண்டி வீதியின் கொனாகொல்ல வரை அம்பாறை, இங்கினியாகல ஊடாக மொனராகலை வீதியின் இங்கினியாகலை வரையும் அம்பாறை ஹிங்குரான வீதியின் பன்னலகம வரையும் அம்பாறை கல்முனை வீதியின் சம்மாந்துறை மற்றும் நிந்தவூர் வரையான பிரதேசம் வரை எமது மத்திய நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்த மத்திய நிலையங்கள் சிறு வியாபார முயற்சிகளை மேற்கொள்வதற்காகவும் அங்கத்தவர்களை இணைத்துக் கொண்டு கடன் வழங்குவதற்காகவும் நிறுவப்பட்டுள்ளது.

| மத்திய நிலையங்கள் | அங்கத்தவர் எண்ணிக்கை | சேவை நிலையங்கள் | வழங்கப்பட்ட கடன் அளவு ரு |
|---|---|---|---|
| 192 | 7026 | 26 | ரு.மி 584 |

பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சேமிப்புத் திட்டமானது “யாலு” சிறுவர் சேமிக்கு கணக்கு மியுலெஸி மகளிர் சேமிப்பு கணக்கு மற்றும் பிரைம் சேமிப்பு கணக்கு ஆகிய கணக்குகள் எமது நிலையத்திலும் காணப்படுகின்றன. உறுப்பினர்களுக்கு நாளாந்தம் தேவைப்படும் உடனடியாக வழங்கப்படும் “நிவாரணக் கடன்” கடன் திட்டத்தின் கீழ் எமது அங்கத்தவர்களின் மாணவ, மாணவிகளின் கல்வி செயற்பாடுகளுக்கு நாளாந்தம் ஏற்படும் செலவுகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதாக இருக்கின்றது. இதன் கீழ் கடந்த காலத்தில் மாத்திரம் 38 மில்லியன் ரூபா பணம் நிவாரணக் கடன் அடிப்படையில் நாம் பெற்றுக் கொடுத்துள்ளோம். அங்கத்தவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட அங்கத்தவர் மற்றும் கடன் பாதுகாப்பு நிதியத்தின் கீழ் அங்கத்தவர்கள் 53 பேருக்காக மரணாதார மற்றும் இழப்பீட்டு தொகையாக ரூபா. 1613035 பணம் கடந்த காலத்தில் செலவிடப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னணி மைக்ரோ பினான்ஸ் நிறுவனம் என்ற வகையில் வர்த்தகத்துக்கு மேலதிகமாக சமூக சேவைகள் பலவற்றிலும் எமது கிளை தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்துள்ளது. எமது அங்கத்தவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட அபிபுரோண வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அவர்களின் வியாபார வளர்ச்சிக்கும் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளோம். அவ்வாறே எமது அங்கத்தவர்கள் எதிநோக்கிய வெள்ளம், வரட்சி ஆகிய இயற்கை அழிவுகளால் ஏற்பட்ட அனர்த்தங்களின் போதும் அவர்களுக்கு உதவிகளை வழங்கியுள்ளோம். இதனால், இந்த வருடம் முழுதும் நிறுவனத்துடன் நெருக்கமான தொடர்பை எமது அங்கத்தவர்கள் இன்று வரை பேணி வருவதுடன் பிரைம் கிராமின் நிறுவனத்துடன் அவர்களின் வாழ்க்கை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கான நோக்கத்துடன் நாம் செயற்பட்டு வருகின்றோம்.



## எந்தவொரு வங்கியும் பணம் கொடுக்க முன்வராத போது எமக்கு கைகொடுத்தது கிராமின் நிறுவனமாகும்

நாம் தளபாட உற்பத்திகள் செய்யும் நிறுவனத்தை 26 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்தோம். எனது கணவரே இந்த வியாபாரத்தை ஆரம்பித்தார். அவருடன் இன்னும் சிலரும் தொழில் புரிகின்றனர். விசேடமாக அலுமாரி, கட்டில், கபட், கண்ணாடி மேசை போன்று சகல வகையான மரத்தளபாடங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. கிராமின் நிறுவனத்துடன் கடந்த 9 வருட காலமாக தொடர்பினை வைத்துள்ளோம். தற்போது எமக்கு வயது சென்று விட்டது. நாங்கள் வயதில் கூடியவர்களாக இருப்பதால் எந்தவொரு வங்கியும் கடன் வழங்க தயக்கம் காட்டின. அவ்வாறான சந்தர்ப்பத்தில் தான் கிராமின் நிறுவனம் தொடர்பாக அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. அவர்கள் எமது வியாபாரம் தொடர்பாக ஆராய்ந்து கடன் வழங்குவதற்கு தீர்மானித்தார்கள். ஆரம்ப கடன் தொகையில் இருந்து தொடர்ச்சியாக நான் கடன் பெற்று வந்துள்ளேன். வாடிக்கையாளரின் தேவைக்கு ஏற்ப நாம் தற்போது அதிகளவான தளபாடங்கள் உற்பத்தி செய்து வருகிறோம். இதனால் தற்போது கடன் பெற வேண்டிய தேவை இல்லாவிட்டாலும் கிராமின் நிறுவனத்துடன் தொடர்ச்சியான உறவினைப் பேணி வருவதற்கான காரணம் அவர்கள் எமக்கு பல்வகையிலும் உதவி வழங்கியதனாலாகும்.

**மோனிக்க பெரேரா**
**விஜய மாவத்தை**
**அம்பாறை**




## பிரைம் கிராமின் நிறுவனம் எம்மோடு இருப்பது எமக்கு பாரிய சக்தியாகும்

நான் சப்பாத்து தயாரிக்கும் தொழிலை கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்தேன். சிறுவர், பெண்களுக்கான பாதணிகள் உட்பட ஆண்களுக்கான பாதணிகளும் தயரிக்கப்படுகின்றன. நான் தயாரிக்கும் சப்பாத்துக்கள், பாதணிகள் வேறு கடைகளில் விற்பனை செய்வதில்லை. கேள்விக்கு ஏற்பவே பாதணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனக்குள்ள வாடிக்கையாளர்கள் என்னைத் தேடி வருவதால் அதற்கேற்ற வகையில் மாத்திரமே பாதணிகள் உற்பத்தி செய்யப்படுவதுடன் மேலதிகமாக உற்பத்தி செய்து களஞ்சியப்படுத்த தேவையான இடவசதியும் இல்லை. 2013ஆம் ஆண்டு பிரைம் கிராமின் நிறுவனத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி பாதணி உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதில் காணப்பட்ட தடைகளை நிவர்த்தி செய்வதற்காகும். கடவுளின் ஆசீர்வாதத்துடன் அவ்வாறு நினைப்பதற்கு ஒன்றுமே இல்லை. நிதி தேவைப்படும் போது பிரைம் கிராமின் நிறுவனம் இருக்கிறது என்ற நினைப்பில் எம் போன்ற சிறிய வியாபாரிகளுக்கு மிகவும் பயனடைகிறோம்.

**ஜீ. நிர்மலா பிரியதர்ஷனி**
**வரங்கனா ஸு பெலஸ்**
**மேற்கு பானம,**
**பானம**



## வியாபாரத்தை வெற்றிகரமாக கொண்டு செல்வதற்கான நிதி தேவைப்பட்டபோது தான் எனக்கு கடன் பெற இடமொன்று தேவைப்பட்டது . . .

வியாபாரம் தொடர்பான அடிப்படை விடயங்கள் எனக்கு இருக்கவில்லை. எமக்கு நாளாந்தம் ஏற்படும் செலவுகள் தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டு சென்ற போது ஏதாவது வியாபாரத்தை செய்ய வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. என்றாலும் வியாபாரமொன்றை ஆரம்பிப்பதற்கு தேவையான பாரிய அளவு நிதி எம்மிடம் இருக்கவில்லை. அதன்பிறகு நிதி முதலீடு செய்யும் வியாபாரமொன்றை ஆரம்பிப்பது தொடர்பாக சிந்திந்துக் கொண்டிருந்த போது, தயிர் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி அதிக இலாபம் ஈட்ட முடியுமென்று நான் நினைத்தேன். அதனடிப்படையில் கடந்த 20 வருடங்களுக்கும் முன்னர் தயிர் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் இவ்வியாபாரத்தை ஆரம்பித்தேன். எமக்கு எருமை மாடுகள் இல்லை. எருமை மாடுகள் உள்ளவர்களிடம் பணத்துக்கு பாலை எடுத்து தயிரை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருகிறேன். தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கும் வியாபாரத்தை மேலும் முன்னேற்றுவதற்கு தேவையான பணத்தை தேட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் போது தான் எமக்கு கடன் வழங்கும் நிறுவனமொன்று தேவைப்பட்டது. அது தொடர்பாக ஆராய்ந்த போது பிரைம் கிராமின் நிறுவனம் தொடர்பாக நான் அறிந்து கொண்டேன். முதலில் 25,000 ரூபா பணத்தை கடனாக பெற்றேன். அதன் பிறகு 50,000 ரூபா பணத்தை கடனாக பெற்றேன். இதன் ஊடாக எருமை மாடொன்றை வாங்கி எனது வியாபாரத்மை முன்னேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளேன். இதற்கு பிரைம் கிராமின் தொடர்ச்சியாக கைகொடுக்குமென்று நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**சந்திரா மாலினி**
**மேற்கு பானம, பானம.**

**தலைவரின் மேசையில் உள்ளதை வாசிப்பதை தவிர்க்கவும்**

# புதிய வருடம் புதிய பயணம்...



கடந்த பல மாதங்களாக ஹட்டன் நஷனல் வங்கி பிரைம் கிராமின் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் குறித்து நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். இந்த உட்படிக்கை எமது இரு நிறுவனங்களுக்கும் எமது நாட்டுக்கும் பொதுவாக எம் எல்லோருக்கும் இதனை பெறுமதி வாய்ந்த உடன்படிக்கையாகவே நான் கருதுகிறேன். இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனைக்கு அமைய ஹட்டன் நஷனல் வங்கியான நாம் தகுதி வாய்ந்த நிதி நிறுவனத்துடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கு கடந்த ஒரு வருட காலத்துக்கு மேலாக நடவடிக்கை எடுத்து வந்தோம்.

2013ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் முதல் தடவையாக இந்த விடயம் தொடர்பாக குறிப்பிட்டிருந்தோம். இலங்கையின் முன்னணி வங்கியான எமக்கு பாரிய பொறுப்பு காணப்படுகின்றது என்பதை நாம் தெரிந்து கொண்டோம். இலங்கையில் நிதி நிறுவனங்கள் பத்துக்கும் மேலாக செயற்படுகின்றது என்பதை நாம் உன்னிப்பாக அவதானித்து வந்தோம். இவற்றில் சிறந்த பெறுபேற்றை கொண்டிருந்த நிதி நிறுவனமாக பிரைம் கிராமின் நிறுவனத்தை அடையாளம் கண்டு அதனுடன் எமது தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு தீர்மானித்தோம். இதற்காக பிரைம் கிராமின் நிறுவனத்துக்கும் அதற்காக வழிகாட்டிய பிரைம் லேண்ட்ஸ் நிறுவனத்துக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஹட்டன் நஷனல் வங்கியானது இலங்கையில் உள்ள பழமை வாய்ந்த தனியார் வர்த்தக வங்கியாகும். எமது வங்கியானது 125 வருடங்களுக்கும் மேலாக நித்துறையில் மக்கள் பணியாற்றி வருகிறது. எமக்கு சிறுகடன் நிதித்துறையில் 25 வருட அனுபவம் இருக்கிறது. சிறுகடன் நிதி எனப்படுவது ஹட்டன் நஷனல் வங்கிக்கு புதிய விடயமல்ல. நாம் செய்யும் சிறுகடன் நிதி செயற்பாடுகளும் அபிவிருத்தி வங்கி செயற்பாடுகளும் பிரைம் கிராமின் செயற்பாடுகளைப் போலன்றி சற்று வித்தியாசமானது.

கடந்த 25 வருடங்களாக நாம் அது தொடர்பில் பாரிய முன்னேற்றம் அடைந்துள்ளோம். நாம் அதனை மேலும் முன்னேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளோம். ஹட்டன் நஷனல் வங்கி நாடளாவிய ரீதியில் 250 கிளைகளைக் கொண்டு செயற்படும் வங்கியாகும். இலங்கையின் சிறந்த வாடிக்கையாளர் வங்கிக்கான விருதினை அடுத்தடுத்து வெற்றி கொண்ட வங்கியாகும். இதனால், எம்முடைய இணைப்பானது நிறுவனங்கள் இரண்டினதும் உற்பத்தி திறனை பாரியளவில் ஊக்குவிக்க முடியுமென்றே நான் கருதுகிறேன்.

2011ஆம் ஆண்டு தொடக்கம் பிரைம் கிராமின் நிறுவனத்துக்கு ஏற்பட்ட சவால்களை வெற்றிகரமான எதிர்நோக்கியதுடன் அதற்கான தீர்வையும் பெற்றுக் கொடுத்த பிரைம் லேண்ட்ஸ் நிறுவனத்துக்கு எமது நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த சவாலை வெற்றி கொள்ள உங்கள் அனைவரினதும் அர்ப்பணிப்பு விசேடமானது. எனது உரையின் பிரதான நோக்கமானது "உங்களுடன் மிகவும் நெருக்கமாக செயற்படுவதற்கும், தேவையான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொடுப்பதுடன் நிறுவனத்தின் நாளாந்த செயற்பாடுகளை மேற்பார்வை செய்து பிரைம் கிராமின் நிறுவனத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்வதற்கு ஹட்டன் நஷனல் வங்கி தயாராக இருக்கிறது" என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிரைம் கிராமின் வங்கிக்கு உரித்தான நிறுவன மதிப்பு, மனிதவளம், பிரைம் லேண்ட்ஸ் நிறுவனம் புதிதாக இணைத்துக் கொண்ட சகல வளங்களுடன் ஹட்டன் நஷனல் வங்கியின் அர்ப்பணிப்பு, கிளைத்தொடர்பு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொடர்பு உட்பட சகலவற்றுக்கும் மேலாக ஹட்டன் நஷனல் வங்கியின் பெயரை இணைத்துக் கொண்டு பிரைம் கிராமின் நிறுவனத்தை இலங்கையின் முதற்தர வர்த்தக வங்கியாக மாற்றியமைப்பதே எமது பிரதான நோக்கமாகும்.

எமது நோக்கம் தோல்விடைய தோல்வியடைய வாய்ப்பில்லை. நாம் அனைவரும் சிறந்தவர்கள். எமக்கு இவ்வளவுதான் செய்ய முடியுமென்ற வரையறையை நிர்ணயித்துக் கொள்ளக் கூடாது. நீங்கள் எந்நேரமும் வாய்ப்புகளை எதிர்பார்த்திருக்க வேண்டும். நீங்கள் எந்நேரமும் உங்களுக்கு மேல் பணியாற்றுபவரின் வழிகாட்டல்கள் அவசியம். நீங்கள் உங்களுடைய மனசாட்சிக்கு நேர்மையாக, உங்கள் இனத்துக்கு உண்மையாக வாழ்ந்தால் என்றும் வழிதவற வாய்ப்பில்லை.

உங்களுக்கு தெரியும் 2013ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் எம் அனைவரையும் எவ்வாறு ஒன்றுபடுத்துவது என்பது தொடர்பாக கூறப்பட்டிருந்தது. எமக்கு பிரைம் கிராமின் நிறுவனம் தொடர்பாக விமர்சனம், பாராட்டு தெரிவிப்பதற்கு ஒன்றும் இருக்கவில்லை. பிரைம் கிராமின் நிறுவனத்தின் நிர்வாக பீடம் மற்றும் கணக்குகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்த போது இந்நிறுவனத்தை விட்டுவிட முடியாது என்று நாம் தெரிந்து கொண்டோம். இந்நிறுவனத்துடன் இணைந்து செயற்பட தீர்மானித்த போது ஹட்டன் நஷனல் வங்கியின் விசேட தீர்மானமாக, எம்முடன் இணைந்து செயற்படும் நபர் யார் என்பதாக இருந்தது. எமக்கு பிரேமலால் அவர்கள், திருமதி சந்தமினி பெரேரா, சமிந்த பிரபாத் அவர்கள் மற்றும் திருமதி தம்பையா ஆகியோருடன் இணைந்து சேவையாற்றுவது இலகுவாக தென்பட்டது. இவ்வாறான காரணங்களை முன்வைத்தே நாம் உங்களுடன் பங்காளராக இணைவதற்கு தீர்மானித்தோம். பிரைம் கிராமின் நிறுவனம் இந்த அளவுக்கு வெற்றி அடைவதற்கு பிரைம் லேண்ட்ஸ் செய்த பணிகளை நாம் மறக்க முடியாது.

ஹட்டன் நஷனல் வங்கி நட்டத்தில் இயங்கும் நிறுவனத்தை பொறுப்பேற்கவில்லை. என்றாலும் பிரைம் லேண்ட்ஸ் நிறுவனம் நட்டத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்த போதே பொறுப்பேற்றுக் கொண்டது. அதுவும் மூன்று வருடங்களுக்கு பின்னர் ஹட்டன் நஷனல் வங்கி உயர் நிலையில் செயற்பட்டுக் கொண்டிருந்த நிறுவனத்தையே பொறுப்பேற்றுக் கொண்டது. நாம் இந்த நிறுவனத்தின் எந்தவொரு குறைகளையும் பார்க்கவில்லை. நாம் நல்ல சந்தர்ப்பத்தை மாத்திரமே எதிர்பார்த்தோம்.

முதலீட்டாளர்களை கவரும் சகல விடயங்களும் இந்நிறுவனத்தில் காணப்படுகின்றன. உங்களிடம் சிறந்த ஆளணிப்படையினர் இருக்கின்றனர். உங்களுடைய கடன் திட்டமும், சேமிப்பு முறையும் மக்கள் மத்தியில் நன்மதிப்பை ஏற்படுத்தியுள்ளது. உங்களுடைய அலுவலக செயற்பாடு நான் நினைக்கிறேன் இத்துறையுடன் தொடர்புள்ள ஏனையவர்களுடன் ஒப்பிடும் போது சிறப்பானது என்று நினைக்கிறேன். சில நிதி நிறுவனங்கள் பிரைம் கிராமின் நிறுவன ஊழியர்களை பணியில் அமர்த்துவதற்கு முயற்சிகள் எடுக்கின்றன. என்றாலும் நான் உங்களில் ஒருவரையும் வேறு நிறுவனங்களில் இணைவதற்கு சந்தர்ப்பம் வழங்க மாட்டேன். உங்களுக்கு நல்ல சந்தர்ப்பங்களை உத்தரவாதத்துடன், வளமான எதிர்காலத்தைப் பெற்றுக் கொடுக்குமென்று ஹட்டன் நஷனல் வங்கி மற்றும் பிரைம் லேண்ட்ஸ் நிறுவனம் உத்தரவாதம் அளிக்கிறது.

எனது நோக்கம் இந்நிறுவனத்தை வங்கித்துறையாக மாற்றியமைப்பதாகும். நீங்கள் ஹட்டன் நஷனல் வங்கியின் இணை நிறுவனமாக செயற்பட ஆரம்பித்தவுடன் நாம் உங்களுடைய தற்போதை செயற்பாட்டில் எவ்வித மாற்றமும் செய்யமால் வங்கி நிர்வாக உத்தியோகத்தர்களாக செயற்பட அனுமதியளிப்போம். எதிர்காலத்தில் இந்நிறுவனத்தின் உடன்படிக்கை மற்றும் அதன் உள்ளடக்கம் முறையாக ஏற்றுக் கொள்ளும் போது இந்நிறுவனத்தை வங்கியாக மாற்றி நீங்கள் வங்கித்தொழில் புரியும் நிர்வாக உத்தியோகத்தர்களாக இணைத்துக் கொள்வதே எனது நோக்கமாகும்.

இச்சந்தர்ப்பத்தில் ஹட்டன் நஷனல் வங்கியில் தொழில் புரியும் ஊழியர்களாக நியமனம் வழங்கப்படும். அவ்வாறே ஹட்டன் நஷனல் வங்கியும், நானும், பிரைம் லேண்ட்ஸ் நிறுவனத்துக்கும், விசேடமாக பிரேமலால் மற்றும் திருமதி சந்தமினி பெரேரா, பிரபாத் ஆகியோர் கடந்த வருடம் முழுவதும் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் தொடர்பாகவும் ஹட்டன் நஷனல் வங்கிக்கும் இந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தமைக்காக நான் இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எதிர்காலத்தில் இந்த வியாபாரத்தை சிறப்பாக முன்னெடுத்து சிறந்த தலைமைத்துவத்தை வெளிப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அவ்வாறே, பணிப்பாளர் சபை உங்களுக்கு தேவையான சகல உதவிகளையும் பெற்றுக் கொடுப்பதுடன் உங்களுக்கு சிறந்த வழிகாட்டியாகவும் இருப்பார்கள் என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன். நாம் உங்களுக்கு தேவையான சகல வளங்களையும் பெற்றுக் கொடுப்போம். என்றாலும் நீங்கள் இந்நிறுவனத்தை நீங்களே சிறப்பாக நடத்திச் செல்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதனால், நீங்கள் அனைவரும், முகாமைத்துவமும், பிரதேச முகாமைத்துவமும், பிரதான தலைமையகமும், உங்களது சகல உத்தியோகத்தர்களும் ஒற்றுமையாக சமிந்த பிரபாத் அவர்களுடன் இணைந்து, குழுவாக செயற்பட்டு கைத்தொழிலில் ஈடுபடுவாதல் ஏற்படக்கூடிய பிரதிகூலங்களை அறிந்து கொள்ள முடியும்.

அதற்கு அடுத்தபடியாக என்ன செய்ய வேண்டுமென்று தீர்மானித்து வியாபாரத்தை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நீங்கள் ஒரு முறையை கையாண்டு அந்த இலக்கை





அடையவேண்டும். இதற்கு நாங்கள் என்ன வேண்டுமென்று எங்களிடம் கேளுங்கள். இதனை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு உங்களிடம் காணப்படுவதுடன் பணிப்பாளர் சபை, பணிப்பாளர் சபையின் செயற்பாடுகளை மாத்திரமே செய்யும். நாம் நாளாந்த முகாமைத்துவ செயற்பாட்டில் தலையிட மாட்டோம். நீங்கள் முறையான பயிற்சியையும் ஆலோசனைகளையும் உங்களின் திறமையை வளர்த்து, மிகவும் பெறுமதிவாய்ந்த கடின உழைப்பாளர்கள் என் பெயரைப் பெறுவீர்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம். நாம் அதற்கான சகல உதவிகளையும் நிச்சயமாக பெற்றுக் கொடுப்போம்.

நாம் உங்களுடன் இணைப்பாளர்களாக செயற்பட விரும்பவில்லை. நாம் உங்களின் வளர்ச்சிக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவதையே எதிர்பார்க்கிறோம். அதற்காக நாம் செய்ய வேண்டிய சில விடயங்கள் காணப்படுகின்றன. எமக்கு 250 கிளைகள் காணப்படுகின்றன. அதனூடாக உங்களின் வாடிக்கையாளர்கள் 3000 பேருக்கு எமது ஏ.ரி.எம். இயந்திரத்தின் ஊடாக பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் உங்கள் நிதியத்தில் 50வீதத்தை குறைத்துக் கொள்ள முடியுமென்று நான் நினைக்கின்றேன். நீங்கள் ஏதேனும் விகிதாரசத்திற்கு ஏற்ப நிதியொன்றை பெற்றிருந்தால் அது இருமடங்குக்கு மேலாக பாரிய அளவில் குறைவடையும். அதைத்தான் உங்களுக்கு ஹட்டன் நஷனல் வங்கியின் ஊடாக வழங்கும் உதவி என்பதுடன் எதிர்காலத்தில் உங்களின் சேமிப்பு அளவை அதிகரிப்பதன் மூலம் மொத்த தொகையை குறைத்துக் கொள்ள முடியும். எனக்கு ஏனைய வங்கிகளுடன் காணப்படும் போட்டியினால் வட்டி விகிதாசாரத்துக்கு ஏற்ப இயங்க முடியாததால் பிரைம் கிராமின் நிறுவனத்துக்கு வாடிக்கையாளர்களை அனுப்புவேன். ஏனெனில் பிரைம் கிராமின் வட்டி விகிதாசாரமானது வங்கித்துறையை விட மிகவும் குறைவானதாகும். இரண்டாவதாக உங்களின் சேமிப்பு கணக்கில் காணப்படும் இறுதி பணத்தை மாத்திரம் அடிப்படையாக வைத்து கடன் வழங்கப்பட முடியாது. உங்களுக்கு அவசர சந்தர்ப்பத்தில் கடன் பெற வேண்டியேற்படலாம். ஹட்டன் நஷனல் வங்கி இருக்கும் போது உங்களுக்கு குறைந்த வட்டி விகிதாசாரத்தில் கடனைப் பெற்றுக் கொள்ள முடியும். மூன்றாவதாக, நாம் சர்வதேச ஒத்துழைப்புடனும் கடன் வழங்கும் திட்டத்தை பார்த்தால் உங்களுக்கு தெரிந்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். அதுவும் குறைந்த விகிதாசாரத்தில் காணப்படுவதை அறிந்து கொள்ள முடியும். சில வேளைகளில் உங்களைவிட ஐந்து மடங்குக்கும் கூடுதலாக போட்டி நிறுவனங்கள் 7% - 8% வரையான வட்டி விகிதாசாரத்துக்கு கடன் பெறப்படுகின்றன. என்றாலும் ஹட்டன் நஷனல் வங்கியில் அதனைவிட அரைவாசிக்கும் குறைந்த வட்டியில் கடனைப் பெற முடியும். இந்த பெறுபேறுகளினால் இலகு கடன் மற்றும் உங்களாள் முன்வைக்கப்படும் ஏனைய புதிய உற்பத்திகளுக்கு போட்டியாளர்களான நீங்கள் வங்கியில் கொடுக்கல்வாங்கல்களை செய்யும் அளவுக்கு ஏற்பவும் விகிதாரத்துக்கு ஏற்பவும் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஹட்டன் நஷனல் வங்கியின் நோக்கமானது இந்த நிறுவனத்தை இந்த வருடத்தி 500 மில்லியன் ரூபா வரையும் அடுத்த மூன்றாண்டுகளில் ஒரு பில்லியன் இலாபத்தைப் பெறும் நிறுவனமாக மாற்றியமைப்பதாகும். அப்போது நீங்களும் உங்களுடை அங்கத்தவர்களும் வாடிக்கையாளர்களை இரண்டு மடங்குக்கும் கூடுதலான பெருக்கிக் கொள்ள முடியும். இதன் மூலம் நீங்கள் சிறுகடன் நிதி செயற்பாட்டாளர்களுக்கு தொடர்ச்சியாக சேவை செய்யக்கூடியதாக இருக்குமென்று நாம் எதிர்பார்க்கிறோம். சகலரும் இந்த நோக்கத்துடன் செயற்பட வேண்டும்.

அவ்வாறே இந்தத் துறையில் எவ்வித மாற்றமும் செய்யாமலும் உங்களில் எவ்வித மாற்றமும் செய்யாமலும் செய்யும் போது அந்த இலக்கை அடைவது இலகுவாகும். 2018 மார்ச் ஆகும் போது உங்களுக்கு இலகுவாக ஒரு பில்லியன் வரை செல்லக்கூடியதாக இருக்கும். எமக்கு இருக்கும் தடைகள் என்ன? அந்த தடைகளே எமது போட்டியாளர்களை ஊக்குப்படுத்துவதாக இருக்கும். சிறுகடன் நிதி என்பதன் அர்த்தத்தை தெரிந்து கொள்ளாதவர்களும் சிறுகடன் தொடர்பாக முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர். இதனூடாக இலாபம் பெற முடியுமென்று அனைவரும் இத்துறைக்கு வரும் போது போட்டி அதிகமாகும். இரண்டாவது சவாலானது மத்திய வங்கியின் ஒழுங்குப்படுத்தல் நிறுவனம் இந்தத் துறையில் ஈடுபடுபவர்களை கட்டுப்படுத்த வேண்டுமென்று நினைக்கிறோம். நாம் அதற்கு தயாராக வேண்டும். உங்களின் வாடிக்கையாளர்கள் பலதடவைகள் உங்களின் நிதிச் சேவையை பெற்றுக் கொண்டு நீங்கள் பெறும் தொகையை அதிகரித்து பாரிய தொகையொன்றை பெற்றுக் கொள்ளும் போது வேறு சிறுகடன் வழங்கும் நிறுவனங்கள் உங்களுடன் போட்டியிட ஆரம்பிக்கின்றன. இதனால், நீங்கள் பாரிய அர்ப்பணிப்புகளை செய்ய வேண்டியதுடன், நிதி செயற்பாடுகளுக்கு மேலாக சென்று சேவையை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

வாடிக்கையாளர்களை தொடர்ந்து வைத்திருப்பதற்காக வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது பாரிய சவாலாகும். புதிய உற்பத்தி, உயர் வாடிக்கையாளர் சேவை, உயர் நிதி முகாமைத்துவ ஆலோசனை சேவை வாடிக்கையாளருக்கு பெற்றுக் கொடுத்தல் மற்றும் தொழில்நுட்ப பயன்பாடு ஆகிய மிகவும் அவசியமாகும். மண்தரையைக் கொண்ட பிரதேசத்துக்கு மோட்டார் சைக்கிளில் செல்லல் போன்றவை தொடர்பாக நான் உங்களுக்கு ஏற்கனவே வரைபடத்தின் ஊடாக தெளிவு படுத்தினேன். அத்துடன் வியாபார செயற்பாடுகளில் மிகவும் பிரதான ஒன்றாக நடமாடும் வங்கி மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க முடியுமானால் அதுவே வாடிக்கையாளர்களை கவரக்கூடிய சிறந்த திட்டங்களாக கருத முடியும்.

நீங்கள் ஆரம்பித்துள்ள புதிய முயற்சியினால் உங்கள் வாழ்க்கையில் பாரிய மாற்றம் ஏற்படும். இதன் அர்த்தம் நீங்கள் வீட்டில் இருந்தவாறே உங்களது சகல செயற்பாடுகளும் கையடக்கத் தொலைபேசியின் ஊடாக தீர்க்க முடியுமென்று நீங்கள் நினைக்க வேண்டாம். இதனூடாக புதிய வாடிக்கையாளர் ஒருவருடன் செயற்படுவது இலகுவாக்கப்படுவதுடன் கூடுதலான காலம் அவருடன் நேரத்தை செலவிடக்கூடியதாக இருக்கும். இன்றுள்ள பாரிய தேவையாக காணப்படுவது நிதியை முதலிடுவது, எதிர்காலத்தில் செயற்பாடுகளை முன்னேற்ற, நுட்பம், நிதி ஆலோசனை, புதிய உற்பத்திகள் போன்ற பல எதிர்காலத்தில் செய்வதற்கு போட்டியிட வேண்டியிருக்கும்.

இன்னுமொரு அர்ப்பணிப்பதான் நீங்கள் பெற்றுக் கொண்ட நிதியில் மொத்த செலவினை குறைத்துக் கொள்ள வேண்டியதாகும்.

எச்.என்.பி. கிராமின் என்ற பெயர் இந்தத் துறையில் முதலீடு செய்து அதன் பயனை எமது முயற்சி உட்பட முழு நிதிக் கைத்தொழிலுக்கும் முன்னோடியாக மாற்றுவதற்கு எமது வாழ்த்துக்கள். அவ்வாறே உங்களுக்கு தேவையான பயிற்சியைப் பெற்றுக் கொடுக்கவும் உங்களை முன்னேற்றுவதற்கும் நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். நிறுவனத்தை உயர்நிலையில் வைத்திருப்பதற்காக நீங்கள் சிறப்பான சேவையை வழங்க வேண்டும். உள்ளூர் சந்தையிலும் சர்வதேச சந்தையிலும் ஏற்படும் மாற்றங்களை அறிந்து வைத்திருப்பது உங்களின் தலையாய கடமையாகும். பிரபாத் அவர்களுடன் பணியாற்றி ஒவ்வொரு வருடமும் உங்களுக்கு தேவையான பயிற்சி, வரவு செலவு தொடர்பான அறிவினையும் பெற்றுக் கொள்ள முடியும். உங்களுடைய திறமையை உயர்மட்டத்தில் பேணி வாடிக்கையாளர் திருப்திபடும் வகையில் சேவையாற்ற வேண்டும். எச்.என்.பி. கிராமின் போன்றே அல்லது பிரைம் கிராமின் இன்றுள்ள நிலையில் தொடர்ந்து வைத்திருப்பதற்கு விரும்பவில்லை. இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிக்கு மேலாக பழைமை வாய்ந்த இலங்கையின் பழமையான வங்கியான நாம் பல்வேறு துறைகளில் செயற்படும் வலுவான வங்கியாகும். என்றாலும் நாம் ஒரு விடயத்தை தெரிந்து கொள்ள வேண்டும். நாம் தொடர்ந்து இத்துறையில் செயற்பட்டுக் கொண்டே இருக்கிறோம். நாம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வருடமும் முன்னேற்றம் அடைய வேண்டுமென்றே நோக்கிலேயே திட்டமிட்டு வருகின்றோம். இந்தத் துறையை வலுப்படுத்த தாய்க் கம்பனியுடன் இணைந்து சேவையாற்றுவதையிட்டு நீங்கள் பெருமைப்பட வேண்டும். நாம் இன்று பிரைம் கிராமின் என்ற நிலையில் இருந்து அதனைவிட பாரிய நிறுவனமாக வளர்ச்சியடைய வேண்டுமென்று நாம் வாழ்த்துகிறோம். நீங்கள் தனிநபர் என்ற வகையிலே குழு என்ற ரீதியிலோ நிறுவனம் என்ற ரீதியிலோ வேறு நிறுவனங்கள் உங்களின் சேவைக்காக தயாராக இருக்கலாம். ஹட்டன் நஷனல் வங்கிக்கு இது மிகவும் முக்கியமான வர்த்தகமாகும். இந்தத் துறையை வளர்ச்சியடையச் செய்வதற்கு உற்சாகத்துடன் இருக்கிறோம். மிக விரைவில் இந்த நிறுவனம் தொடர்பாக மீண்டும் பேசுவதற்கு சந்தர்ப்பத்தை வழங்குவீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் வளமான எதிர்காலம் உண்டாகட்டும்

ஜொனதன் அலஸ்
தலைவர் – பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்

**(பிரைம் கிராமின் நிறுவனத்தின் புதிய தலைவராக பதவியேற்ற (08.12.2014) ஜெனதன் அலஸ் அவர்கள் பிரைம் கிராமின் நிறுவன உத்தியோகத்தர்கள் முன்னிலையில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்)**




**பிரச்சினைகள் ஏற்படும் போது நண்பர்களை அறிந்து கொள்ள முடியும்**

# கிராமின் சக்தி

## அவரின் வளர்ச்சி



எழுபது எண்பதாம் ஆண்டு தசாப்தங்கள் தொடர்பாக எமது மனங்களில் நல்லெண்ணம், தப்பான அபிப்பிராயங்களும் கலந்து காணப்பட்டன. இன்றும் வாழ்வின் நினைவுகளை ஞாபகப்படுத்தும், படைப்புகள் பலவற்றை வெளிப்படுத்திய பசுமையான காலப்பகுதி இருளடைந்த எழுபது எண்பதாம் ஆண்டு தசாப்தமாகும். அவ்வாறே இலங்கை வரலாற்றில் கறும்புள்ளி இடப்பட்ட 71 . . . மற்றும் 83ஆம் ஆண்டு கலவரம் 70,80 தசாப்தங்களின் நினைவுகள் வரலாற்றில் பதியப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையையும் கோடிக்கணக்கான சொத்து அழிவையும் ஏற்படுத்தி காலம் தொடர்பாக சுப்ரமணியம் புஷ்பலதா தெரிவித்த உருக்கமான விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

புஷ்பலதாவின் பிறப்பிடம் திருகோணமலையாகும். வியாபாரியான சுப்ரமணியத்துக்கு இரண்டு பெண் பிள்ளைகள் இருந்தனர். மூத்தமகள் புஷ்பலதாவாகும். இவரின் பாசத்துக்குரிய தந்தாக சுப்ரமணியம் இருந்தார். தந்தையின் மரணத்துக்கு பின் புஷ்பலதா பல்வேறு கஷ்டத்துக்குள்ளானார். எனினும், திருகோணமலையில் பிரசித்தி பெற்ற வர்த்தகரான வீ.பீ. ஜேசுதாஸன், புஷ்பலதாவின் பெரியப்பாவாகும். தந்தையின் மறைவுக்குப் பின்னர் பெரியப்பா புஷ்பலதா மற்றும் அவரது தங்கையை தனது மகள்மார்களைப் போன்று கவனித்து வந்தார். அவர்கள் இருவரையும் சென்மேரிஸ் பெண்கள் கல்லூரியில் சேர்த்து அவர்களின் கல்விக்கு வித்திட்டார். சாதாரண பரீட்சையின் பின்னர் புஷ்பலதா கல்வியைத் தொடரவில்லை. பெரியப்பாவுக்கு உதவ வேண்டுமென்ற எண்ணத்தினாலேயே அவர் உயர்தரம் கற்கவில்லை. அப்போது “மரீனா பிஸ்கட்” என்ற பெயரில் பிஸ்கட் உற்பத்தியை பெரியப்பா ஆரம்பித்திருந்தார். இதற்கு மேலதிகமாக அன்னாஸ் என்ற பெயரில் பேக் உற்பத்தி நிலையமென்றும் இருந்தது. மரீனா பிஸ்கட் அக்காலப்பகுதியில் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தது. பெரியப்பாவின் இரண்டு வியாபாரங்களும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்போது பெரியப்பா பேக்கரி தொழிலையும் ஆரம்பித்தார்.

இக்காலப்பகுதியில் பேக் உற்பத்தி கைத்தொழிலில் பெரியப்பாவுக்கு நானும் உதவி செய்தேன்.

வாழ்க்கையில் எமக்கு கிடைத்தது சமவெளியான பூமியல்ல. பல்வேறு மேடு பள்ளங்களை உடைய வாழ்க்கையே கிடைத்தது. காணல் நீராகிப் போன புஷ்பலதாவின் வாழ்க்கை இப்பாரில் நிகழும் சாதாரண நிகழ்வாக கருத முடியாது.

வரையறுக்கப்பட்ட மனித வாழ்க்கையில் இருளை ஏற்படுத்திய 83 கறுப்பு ஜுலை பெரும்பாலான மக்களின் வாழ்க்கை உட்பட சொத்துக்கள் அழிவடைந்த காலப்பகுதி எனலாம். இந்த துயரச் சம்பவத்தில் சிங்களவர், தமிழர் என்றில்லாமல் சகலரும் பாதிக்கப்பட்டனர். இந்த சம்பவத்தில் இருந்து ஜேசுதாசனுக்கும் விடுபட முடியாமல் போனது. ஜேசுதாஸனின் பேக் உற்பத்தி நிலையமும், பிஸ்கட் கைத்தொழிற்சாலையும் முழுமையாக இழுத்து மூடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டது.




# அனர்த்தத்தினால் வியாபாரம் ஸ்தம்பிதம் அடைந்தாலும் எனது மனப்பலம் மீண்டெழவில்லை

### சுப்ரமணியம் புஷ்பலதா
### பிரைம் கிராமின் திருகோணமலை கிளை

மின்சாரமின்றி இப்பகுதியில் இருந்த அனேக கைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. அந்த துயரச் சம்பவம் எமது வாழ்விலும் விதிவிலக்கல்ல எனலாம். பெரியப்பா பேக் உற்பத்தி நிலைத்தையும், பிஸ்கட் தொழிற்சாலையையும் மூடினார். ஒவ்வொரு நாளும் அழிவு ஏற்பட்ட போதும் வாழ்க்கையை தொடர்ந்து இடைநடுவில் விட்டுவிட்டு செல்ல முடியாத நிலை காணப்பட்டது. ஆரம்பித்தில் இருந்து வாழ்க்கையை தொடர வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால், நான் வியாபாரத்தை மீண்டும் ஆரம்பிக்க நினைத்தேன். பெரியப்பாவின் உதவியுடன் திருகோணமலை நீதிமன்ற வீதியில் அன்னாஸ் பேக்கரி என்ற பெயரில் பேக்கரி, ஹோட்டலை ஆரம்பித்தேன். பேக்கரி நிர்வாகம் எனது பொறுப்பில் காணப்பட்டது. ஹோட்டல் நிர்வாகத்தை தங்கை பொறுப்பேற்றுக் கொண்டார். எமது பேக்கரியில் பாண், பனிஸ், கேக் உட்பட பல்வேறு உணவுகள் தயாரிக்கப்பட்டன. வியாபாரத்தை நடத்திச் செல்லும் போது நாளாந்த செலவுக்களுக்கான பணத்தை தேடுவது சிறுவியாபாரிகளுக்கு மிகவும் கஷ்டம். இந்நிலையில் வங்கிக்கு செலுத்த வேண்டிய நாளாந்த பணத்தை தேடுவதில் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கினாலும் சில வங்கிகளின் செயற்பாடுகள் எமக்கு அதைவிட பாரிய பிரச்சினையாக இருந்தது. எம்மிடம் பணமில்லாது இருக்கும் போது நான் பிரைம் கிராமின் நிறுவனம் தொடர்பாக அறிந்து கொள்ள கிடைத்தது. பிரைம் கிராமின் கடன் வழங்கும் செயற்பாடு மிகவும் இலகுவானது எனலாம் அவ்வாறே வியாபார தன்மைக்கு ஏற்பவே கடன் வழங்குகின்றனர். சிறிது சிறிதாக பணத்தைப் பெறுவதால் வீண் விரயங்களை தவிர்க்கக்கூடியதாக உள்ளது. இதனால், பெறப்படும் மொத்த பணத்தைம் வியாபாரத்துக்கு உட்படுத்த வேண்டியுள்ளது. நான் முதன் முதலில் 25,000 ரூபா பணத்தை கடனாக பெற்றேன். அதற்கு பிறகு 35,000, 50,000 ரூபா பணத்தை கடனாக பெற்றேன். நான் பெற்ற கடனின் மூலமாக பல்வேறு உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப்படுத்தினேன். அத்துடன் மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் உபகரணங்கள் வாங்குவதற்கும் அப்பணத்தை செலவிட்டேன்.

அன்னாஸ் பேக்கரிக்கு மேலதிகமாக பேக்கரி பொருட்களை விநியோகம் செய்யும் இரண்டு வாகனங்களும் புஷ்பலதாவிடம் இருக்கின்றது. இந்த வாகனத்தின் ஊடாக திருகோணமலையில் உள்ள சகல பிரதேசங்களுக்கும் பேக்கரி உற்பத்திகள் விநியோகிக்கப்படுகின்றன. திருகோணமலை நகர மக்களுக்கு பழக்கப்பட்ட அன்னாஸ் பேக்கரி உணவுப் பொருட்கள் சுவையாக காணப்பட்டாலும் அன்னாஸ் வியாபாரத்தின் கதை இனிமையானதல்ல. என்றாலும் அழிவடைந்த ஒரு வியாபாரத்தை மீண்டும் அதே நிலைக்கு கொண்டு வரும் அளவுக்கு பணபலம் படைத்த புஷ்பலதாவின் முயற்சியை பாராட்ட வேண்டும். அவருடைய வியாபாரத்தினால் இன்று பலர் தொழில் பெற்றுள்ள நிலையில் புஷ்பலதாவின் சொத்துக்கு வேறு எவரும் உரித்துடையவரல்ல என்பது நிச்சயம். திடமான நம்பிக்கை மற்றும் அர்ப்பணிப்பு ஆகியனவே வாழ்க்கை என்பதை அவருடைய அனுபவத்தின் ஊடாக நாம் கண்டு கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

ஆக்கம்
மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படம் - லக்ஷ்மன் குமாரதுங்க



பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி சமிந்த பிரபாத் அவர்களுடனான நேர்காணலை கீழே தருகின்றோம்

# மைக்ரோ பினான்ஸ் நிறுவனத்தின் ஆரம்பமும் நடைமுறையும்

## பகுதி 2

**மைக்ரோ கிரடிட் ஆரம்பமும் வளர்ச்சியும் குறித்து ஆராய்ந்து பார்க்கும் போது அது ஏனைய திட்டங்களைப் போன்று மிக மெதுவாக அனுபவங்களின் ஊடாக பெற்ற மாற்றங்களுக்கு அமைய முன்னேற்றம் கண்டுள்ளமை முக்கியமான அம்சமாகும்.**

நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஒன்றுபட்டு பொறுப்புகளால் இணைந்து தங்களுக்கிடையில் பிணை நிற்கும் அடிப்படையில் அமைக்கும் வியாபாரத்திற்காக கடன் பெறும் குழுக் கடன் முறை முன்னேற்றம் கண்டது. கிராமின் வங்கி என்ற பெயரில் பங்களாதேஷில் ஆரம்பிக்கப்பட்ட நுண் நிதிக்கடன் (சிறிய கடன்) நிறுவனமும் பொலிவியாவின் பென்கொசோலில் அமைக்கப்பட்ட (Bancosol) ACCION நிறுவனமுமே இந்த குழுக் கடன் முறையின் ஸ்தாபகர்களாக வரலாற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குழக் கடன் முறை வெற்றியளிப்பதற்கு கடன் பெறும் குழுவினரிடையே சமத்துவம் மிக முக்கியமாக கருதப்படுகிறது. அதாவது சமமான சமூக சூழ்நிலை (குலம், இனம்) சமமான வருமான அளவுகள் போன்றவற்றின் (Homogeneous Group) சமநிலையும் ஆகும். இங்கு காணப்படும் சமனற்ற தன்மையினால் குழுவின் கூட்டுப் பொறுப்பை உடைக்க காரணமாக அமைவதோடு இறுதியில் கடனை மீளப்பெறுகையில் சிக்கல் நிலையை ஏற்படுத்துகிறது. அதேபோன்று இது கடனை மீளச் செலுத்தும் போக்கில் தடையை உருவாக்கும். அதனால், கடன் வழங்கும் குழுக்களை அடையாளம் காணும் போது அவர்களின் சமூக, பொருளாதார பின்னணி குறித்து கவனம் செலுத்துவது அவசியமாகும்.

மைக்ரோ கிரடிட் திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் குழுவில் தலைவர் ஒருவரும் கணக்காய்வாளர் ஒருவரும், பொருளாளர் ஒருவரும் அடங்கலான அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழு குறிப்பிட்ட தினத்தில் கூடி கூட்டான முடிவு எடுத்தது. அதேபோன்று கடன் பெற்றவர்கள், பெற்ற கடனை திருப்பி செலுத்துவது குறித்து முழுமையாகவோ, பகுதியாகவோ ஆராயப்பட்டது. அவர்கள் முன்பு எவ்வாறு கடன் பெற்றனர் என்பது குறித்தும் அதனை திருப்பிச் செலுத்திய விதம் குறித்தும் இதன் போதும் விசாரிக்கப்பட்டது. Aside test என அடையாளம் காணப்பட்ட இந்த விசாரணை, கடன் பெற்றவர்களின் நிதி மட்டம் தொடர்பான மதிப்பீடாகும். இதன் பிரகாரம் கடனாளிகளின் அடிப்படை வருமான நிலை, வீட்டு வருமானம், செலவு என்பவற்றுக்கிடையிலான இடைவெளி என்பன குறித்த ஆராயப்படும். வீட்டு வருமானம் மற்றும் செலவு என்பவற்றுக்கிடையிலான விகிதாசாரத்தை கணிப்பிட்டு கிடைக்கும் மிகுதியில் 50 வீதத்தை தவணைத் தொகையாக செலுத்த முடியுமென்பதை அடிப்படையாகக் கொண்டு கடன் வழங்கப்படுவதாகும்.

உதாரணமாக வீட்டு வருமானம் 10,000 ரூபாவாகவும் செலவு 8,000ரூபாவாகவும் இருந்தால் அவற்றுக்கிடையிலான வித்தியாசம் 2,000ரூபாவாகும். இதில் 50வீதத்தை அதாவது 1,000 ரூபாவை தவணைக் கொடுப்பனவாக செலுத்தக்கூடிய வகையில் கடன் வழங்கப்பட வேண்டும்.

குழக் கடன் முறையில் குழுவில் இருக்க வேண்டிய தொகை மூன்றுக்கும் பத்துக்கும் இடைப்பட்ட தொகையாகும். இதிலுள்ள அனைவரும் கூட்டுப் பொறுப்புக்கு கட்டுப்படுவது முக்கியமாகும். உலகில் நடைமுறைப்படுத்தப்படும் அனேகமான மைக்ரோ கிரடிட் நிறுவனங்கள் வங்கியூடாகவே கடன் வழங்குவதாவது இலங்கையில் காணப்படும் முறையோடு ஒப்பிடுகையில் விசேடமானதாகும். இலங்கையில் நிதிக்கம்பனிகள் ஊடாக கடன் வழங்கப்படுவது அந்த வித்தியாசமாகும்.

இந்தியாவில் Natard வங்கியானது இவ்வாறான மைக்ரோ கிரடிட் கடனை வழங்கும் வங்கிகளிடையே முன்னிலையில் காணப்படுகிறது. மைக்ரோ கிரடிட் முறைமை முன்னேற்றம் கண்டு வருவதோடு கிராமின் வங்கி பிற்காலத்தில் அதன் போக்கை மாற்றிக் கொண்டது. கடனை மீளச் செலுத்தாத நிலைமைக்கு அவர்கள் தொடர்ச்சியாக முகம் கொடுத்ததே இதற்கு காரணமாகும். 1998ஆம் ஆண்டு பங்களாதேீல் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக இவ்வாறான நிலைமை உருவானது. இது தொடர்பான முறைமைகளில் காணப்படும் சில குறைபாடுகள் போன்றே மைக்ரோ கிரடிட் முறையில் காணப்பட்ட போட்டித் தன்மையும் இதற்கு காரணமாக அமைந்தது. இந்த அனைத்து நிலைமைகளையும் ஆராய்ந்து பார்த்ததன் பின்னர் கிராமின் திட்டத்தில் புதிய தோற்றத்தை ஏற்படுத்தி 2000ஆம் ஆண்டில் மைக்ரோ கிரடிட் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முறைமை கிராமின் 2 என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டது.



# இதோ NEWS

படம் -
பத்மகுமார கொந்தசிங்க, லக்ஷ்மன் குமாரதுங்க

## 11ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு புத்தளம் கிளையில் பல்வேறு சமூக சேவை வேலைத்திட்டங்கள்

பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவன புத்தளம் கிளை 11வருட நிறைவின் நிமித்தம் கடந்த நவம்பர் மாதம் 28ஆம் திகதி முழு நாளும் பல்வேறு சமூக சேவைகளில் பலவற்றை புத்தளம் கிளையின் உத்தியோகத்தர்கள் செய்தனர்.

தமது கிளையின் சிரார்த்த தினத்தை முன்னிட்டு அன்று காலை 7.00 மணிக்கு வரலாற்று சிறப்பு மிக்க தலவில புனித அனா தேவாலயத்தில் விசேட ஆராதனை நடைபெற்றதுடன் அன்னை மரியாளின் ஆசி பெறப்பட்ட பின்னர் அன்றை நிகழ்வுகள் இனிதே ஆரம்பமாகின. இனிக்பில்லி, நாரக்கலிய ரோமன் கத்தோலிக்க கல்லூரி மற்றும் சிரம்பிஅடிய மானவேரி கனிஷ்ட வித்தியாலய சிறுவர், சிறுமியர்களின் கல்வி செயற்பாட்டுக்காக இரண்டு கணனிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன.

புத்தளம் கிளை உத்தியோகத்தர்களினால் அன்று மாலை அவர்களது நேரத்தை விசேட செயற்திட்டமொன்றுக்காக செலவழித்தனர். கலம்பய முதியோர் இல்லத்துக்கு இரவு உணவு வழங்கியதுடன், அவர்களின் தேக ஆரோக்கிய மேம்பாட்டுக்காக உளவள சிகிச்சையொன்றை செய்தனர். அன்று இரவு அவர்களுடன் பொழுதை கழித்ததுடன் அவர்களின் மனதை குதூகலப்படுத்தும் இசைக் கச்சேரிகளையும் நடத்தினர். அவ்வாறே அங்குள்ள முதியோர்களும் இந்த இசை நிகழ்வில் ஈடுபட்டு குடும்ப உறுப்பினர்களுடன் வாழும் ஒரு சூழலை ஏற்படுத்தி ஆனந்தமாக அன்றைய இரவை போக்கினர்.

பிரைம் கிராமின் புத்தளம் கிளை தனது சிரார்த்த தினத்தை மிகவும் பயனுள்ள வகையில் கொண்டாடியதாக பிரதி பொதுமுகாமையாளர் அனஸ்லி பர்னாந்து அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்காக ஏற்பட்ட அனைத்து செலவுகளும், கிளை உத்தியோகத்தர்கள் மற்றும் தலைமையகத்தினால் முகாமைத்துவம் செய்யப்பட்டதாக பிரதேச முகாமையாளர் லக்ஷ்மன் எராஜ் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரைம் கிராமின் நிறுவன உதவி பொதுமுகாமையாளர் பிரபாத் அத்திஆராய்ச்சி, சிரேஷ்ட முகாமையாளர் தினேஷ் தரங்க, உதவி முகாமையாளர் நுவன் லக்ஷ்மன் ஆகியோர் கலந்து கொண்டனர்.













## கிரிமெட்டியான வித்யாபந்து முதியோர் இல்லத்துக்கு வென்னப்புவ கிளையினால் குளிரூட்டி. . .





பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் வென்னப்புவ கிளை 2014ஆம் ஆண்டு வருட இறுதி நிகழ்வை கொண்டாடியதுடன் மேலும் விசேட சனசமூக சேவையொன்றை மேற்கொண்டமை எமக்கு தெரியவந்தது. இது தொடர்பாக நாம் வென்னப்புவ கிளையின் முகாமையாளர் நிலுக திலுக் தமேல் அவர்களை தொடர்பு கொண்டு கேட்டோம்.

வருட இறுதி தினத்தை கொண்டாடுவதற்காக தமது நாளாந்த காரியாலய வேலை நேரத்துக்கு மேலதிகமாக சமூக சேவைகளில் ஈடுபடுவது குறித்து நாம் தீர்மானித்தோம். இதன் பிரகாரம் முதியோர் இல்லமொன்றுக்கு இரவு நேர உணவை வழங்கவேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டது. அதற்காக கிரியாமெட்டியான வித்தியாபந்து முதியோர் இல்லத்தை தேர்ந்தெடுத்தோம். நாம் இரவு உணவை வழங்குவது தொடர்பாக அங்குள்ள பொறுப்பாளரிடம் தொடர்பை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தோம். ஆனால், அந்த இல்லத்தில் இரவு உணவு உட்பட அத்தியாவசியப் பொருட்களுக்கு எவ்வித தட்டுப்பாடுகள் இல்லையென்று அவர் தெரிவித்தார். எனினும், குறித்த இல்லத்தில் பலகாலமாக குளிரூட்டியொன்று இன்மையால் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருவதாக தெரிவித்தார்.

இதனடிப்படையில் நாம் முதியோர் இல்லத்துக்கு குளிரூட்டி ஒன்றினை நன்கொடையாக வழங்குவதென்று தீர்மானித்தோம். இதற்காக எமது நிறுவன தலைமையகத்திலும், கிளை உத்தியோகத்தர்களிடமும் நிதி உதவி பெறப்பட்டு குளிரூட்டி வழங்கப்பட்டது. அன்றைய தினம் முதியோர் இல்லத்தில் தேநீர் விருந்துபசாரமொன்றும் பிரைம் கிராமின் நிறுவன உத்தியோகத்தர்களால் ஏற்பாடு

## ஸ்ரீபாத யாத்திரையை முன்னிட்டு இரத்தினபுரி கிளையில் கடலை தன்சல





துருது போயா தினம் பௌத்தர்களின் விசேட தினமாக கருதப்படுகிறது. துருது போயா தினம் முதல் ஸ்ரீ பாத உற்சவம் ஆரம்பமாகின்றது. இந்நிகழ்வை முன்னிட்டு பெல்மடுள்ள, கல்பொத்தாவல விகாரையில் உள்ள தங்கமூலம் பூசப்பட்ட புத்தர் சிலை ஸ்ரீபாத புண்ணி பூமியில் புத்தபெருமானின் கால்பாதம் உள்ள இடத்துக்கு கொண்டு செல்லப்படுவது விசேட அம்சமாகும். இதனால் பௌத்தர்கள் இந்நாட்களில் ஸ்ரீ பாத மலைக்கு செல்லும் ஆரம்ப நாளாக துருது போயா தினத்தை கருதுகின்றனர். கடந்த டிசம்பர் 05ஆம் திகதி ஆரம்பமான பெரஹர நிகழ்வுக்காக பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவன இரத்தினபுரி கிளை தனது பங்களிப்புக்காக, பெரஹரவில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு கடலை வழங்கி ஆசி பெற்றுக் கொண்டனர். பிரைம் கிராமின் இரத்தினபுரி கிளைக்கு முன்பாக அன்று காலை 10.00 மணிக்கு கடலை தன்சல ஆரம்பமானது. இரத்தினபுரி கிளையின் கிளை முகாமையாளர் மற்றும் காரியாலய உத்தியோகத்தர்களின் அனுசரணையில் இந்நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதேச முகாமையாளர் சமிந்த சம்பத் அவர்களும் கலந்து கொண்டார்.




# வர்த்தக அலுவல்கள் மற்றும் அதனுடன் இணைந்த சேவைகள்

13 பாகம்

## முகாமைத்துவ மட்டங்கள்

நிறுவனத்திலுள்ள அனைத்து முகாமையாளர்களின் பணிகளும் ஒரே மாதிரி சமமானதல்ல.நிறுவனத்தில் ஒவ்வொருவருக்குமுள்ள நிலைமைக்கு ஏற்ப முகாமையாளர்களுக்கு வழங்கப்படும் பொறுப்புகளும் வேறுபடும்.தாம் இணையும் அமைப்பின் பொறுப்புகளின் மட்டம் மற்றும் அமைப்பில் அவர்களுக்குள்ள பதவி நிலை என்பவற்றுக்கு ஏற்ப முகாமையாளர்கள் வகைப்படுத்தப் படுவர். சம்பிரதாய வகைப்படுத்தலின் போது அமைப்பிலுள்ள முகைமையாளர்கள் பிரமிட்டைப் போன்று கணிப்பிடப்படுவர். இதற்கு காரணம் பொதுவாக உயர் பதவியிலுஅள்ள முகாமையாளர்களை விட அதிகமாக கீழ் மட்டத்தில் இருப்பர். முகாமையாளர்கள் பரவிக்கிடக்கும் விதம் கீழ் வரும் படத்தில் சித்தரிக்கப்படுகிறது.

முகாமைத்துவ மட்டங்கள்
Management Levels




### 01 உயர் / மேல் முகாமைத்துவ மட்டங்கள்


நிறுவனத்தில் உயர் பதவி வகிக்கும் இவர்கள் உபாயகர முகாமையாளர்களாக கருதப்படுகின்றனர். முழு நிறுவனத்தினதும் பொறுப்புகளை தாங்கும் இவர்கள் நிறுவனத்தின் இலக்குகளை நிறைவேற்ற உபாய மார்க்கங்கள் மற்றும் கொள்கைகளை மதிப்பீடு மற்றும் கட்டுப்படுத்தல் செய்கின்றனர். உயர் மட்ட முகாமையாளர்கள் தயாரிக்கும் செயற் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை முன்னெடுப்பது மற்றும் முதலாம் நிலை முகாகையாளர்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்தி குறித்து ஆராய்வது இவர்களாகும்.

### 03. முதலாம் நிலை முகாமையாளர்களின் மட்டம்

முகாமைத்துவ தரம் சாராத ஊழியர்களின் பணிகளை கண்காணித்தல் நிர்வகித்தல் என்பவற்றில் ஈடுபட்டுள்ள இந்த ஊழியர்கள் மற்றும் நடுத்தர முகாமையாளர்களுக்கிடையில் இணைப்பை ஏற்படுத்தும் முகாமையாளர்களாகும். நடுத்தர முகாமையாளர்களுக்குத் தேவையான தகவல்களை தயாரித்தல் நிறுவனத்தின் நாளாந்த பணிகளை சுமுகமாக மேற்கோள்ள நடுத்தர முகாமையாளர்களின் தீர்மாணங்களை செயற்படுத்தல் என்பன இவர்களின் பணியாகும்

### முகாமையாளர்களின் பொறுப்புக்கள் மற்றும் முகாமைத்துவ எல்லைகள்

- முதலாம் தர நிலை முகாமையாளர்கள் அதிகமாக நடவடிக்கை பணகளில் ஈடுபடுவர்.
- மேல் மட்ட முகாமையாளர்கள் அதிகமாக திட்டமிடலில் ஈடுபடுவர்.
- நடுத்தர நிலை முகாமையாளர்கள் எப்போதும் முகாமைத்துவ செயற்பாட்டில் பொதுவாக மேற்கொள்வர்.



அட்டவணை 02

ஒழுங்கமைத்தல் பணிகள் அதிகமாக மேல் மட்ட முகாமையாளர்களின் பின்னர் நடுத்தர முகாமைத்துவத்தில் சிறிதளவு முதலாம் தர முகாமையாளர்கள் ஈடுபடுவர்.



சந்தகெலும் ஜயதுங்க,
கணக்காளர்,
பிரைம் கிராமின்
மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்.


## நகரக் கிளையின் அனுசரணையில் பிரைம் கிராமின் “கல்விச் சுற்றுலா” ஜயவர்தனபுர கல்வி வலயத்தில்





பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவனம் தனது பணியை செய்யும் போது சமூக மேம்பாட்டை நோக்கிய வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றது. விசேடமாக நாட்டிலுள்ள சிறுவர்களின் கல்வி மேம்பாட்டை விருத்தி செய்வதில் அதிக ஆர்வம் காட்டுகிறது. இம்முறை ஸ்ரீ ஜயவர்தனபுற கல்வி வலயத்துக்குட்பட்ட நான்கு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவ, மாணவிகளுக்காக நடத்தப்பட்ட கல்விக் கருத்தரங்கு கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி மேல்மாகாண, ஜயவர்தனபுற, உடுகமுல்ல சித்தார்த்த மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் மிகவும் விமர்சையாக நடைபெற்றது.

சிங்களம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்கள் கருத்தரங்கில் நடத்தப்பட்டதுடன் சிரேஷ்ட விரிவுரையாளர்களினால் காலை 8.30 மணி முதல் மாலை 5.30 வரை இக்கருத்தரங்கு நடத்தப்பட்டது. நிகழ்வின் ஆரம்ப வைபவத்தில் பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்டின் பிரதிப் பொது முகாமையாளர் தரங்க தீபால், உதவிப் பொதுமுகாமையாளர்களான கமல் பிரியங்கர, பெத்தும் சம்பத்குரே, பிரதேச முகாமையாளர் சுஜித் குமார, சிரேஷ்ட முகாமையாளர் அனுர உடவத்த மற்றும் நகரக் கிளையின் உத்தியோகத்தர்கள், உடுகமுல்ல சித்தார்த்த மகா வித்தியாலய அதிபர் உட்பட ஏனைய மூன்று பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரிய, ஆசிரியைகள் மற்றும் கருத்தரங்கிற்காக தெரிவு செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான மாணவர்களும் கலந்து கொண்டனர்.



# பிரைம் கிராமின் ஒன்று கூடலின் போது. . .

பிரைம் கிராமின் நிறுவன வருட இறுதி நிகழ்வுகள் இம்முறை கல்கிஸ்ஸ மவுன்ட் பீரிஸ் ஹோட்டலில் கடந்த 12.11.2014 அன்று நடைபெற்றது.

பிரைம் லேண்ட்ஸ் கூட்டு நிறுவன தலைவர் பீ. பிரேமலால், உபதலைவர் சந்தமினி பெரேரா மற்றும் பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் பிரதான நிறைவேற்றுப் உத்தியோகத்தர் சமிந்த பிரபாத், பணிப்பாளர் திருமதி கிருஷாந்தி தம்பையா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தலைமையகத்தின் சகல உத்தியோகத்தர்களும், பிரதேச முகாமையாளர்கள், பிரதி முகாமையாளர்கள் மற்றும் உதவி முகாமையாளர்கள் கலந்து சிறப்பித்தனர். இந்த ஒன்று கூடலில் பிரைம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஒவ்வொரு பகுதியிலும் இருந்து ஒவ்வொரு நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. குறிப்பாக மனதுக்கு இனிமையான களியாட்ட நிகழ்வுகள் உட்பட பல்வேறு நாடகங்களும் உள்ளங்களைக் கொள்ளைக் கொண்டன. அன்று மாலை ஆரம்பமான நிகழ்வு நள்ளிரவு வரை நடைபெற்றதுடன் நிகழ்வில் பதியப்பட்ட விசித்திரமான படங்கள் எமது படப்பிடிப்பாளர் லக்ஷ்மன் குமாரதுங்க மற்றும் பத்மகுமார கொந்தசிங்க ஆகியோரின் கமராவுக்கு பிடிபட்டது.




## Happy Birthday

ஜனவரி, பெப்ரவரி மாத பிறந்த நாளைக் கொண்டாடும் பிரைம் கிராமின் நிறுவன ஊழியர்களுக்கு எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்...!

| பெயர் | திகதி | கிளை |
|---|---|---|
| திரு. சுசிர பிரியலால் அரங்கல | ஜனவரி 15 | தலைமையகம் |
| திரு. துசித்த இந்திரஜித் | ஜனவரி 15 | ஜாஎல |
| திரு. சுபசிங்க | ஜனவரி | 15 வென்னப்புவ |
| திரு. கிரு'ணகுமாரன் ரவிசான் | ஜனவரி 15 | கந்தளாய் |
| திரு. அமில சானக்க | ஜனவரி 15 | ஹம்பாந்தோட்டை |
| திருமதி. சஞ்சீவ பண்டாரா | ஜனவரி 15 | தலைமையகம் |
| திரு. லக்மால் சோமாரத்ன | ஜனவரி 16 | தலைமையகம் |
| திரு. தரிந்து வன்னிநாயக்க | ஜனவரி 16 | அனுராதபுரம் |
| திரு. இசார சங்கீத் | ஜனவரி 16 | வெலிமட |
| திரு. அமில ஹேரத் | ஜனவரி 17 | தலைமையகம் |
| திரு. சுப்பையா ரவி | ஜனவரி 17 | நாவலப்பிட்டி |
| திரு. சுரே' சுபசிங்க | ஜனவரி 17 | பண்டாரகம |
| திரு. தமித் புஷ்ப குமார | ஜனவரி 17 | அவிஸ்ஸவாளை |
| திரு. சுதத் விஜேந்திர | ஜனவரி 17 | தலைமையகம் |
| திரு. ஈ. உதயகுமார் | ஜனவரி 17 | மட்டக்களப்பு |
| திரு. சந்தன பு'பகுமார | ஜனவரி 18 | மாத்தளை |
| திரு. சமிந்த ஜானக்க | ஜனவரி 19 | இரத்தினபுரி |
| திரு. சமீர ரஞ்சித் | ஜனவரி 19 | வென்னப்புவ |
| திரு. அகேன் நானயக்கார | ஜனவரி 20 | ஜாஎல |
| திரு. வசந்த பீரிஸ் | ஜனவரி 21 | நகரக்கிளை |
| திரு. ஹேசித்த கமகே | ஜனவரி 21 | தலைமையகம் |
| திரு. மனிமாரன் விநோதன் | ஜனவரி 21 | வெலிமடை |
| திரு. அசேல பண்டார | ஜனவரி 22 | கண்டி |
| திரு. லசந்த ராஜபக்' | ஜனவரி 22 | தலைமையகம் |
| திரு. லசங்க மதுசான் | ஜனவரி 22 | ஹோமாகம |
| திரு. உதித்த பிரபாத் | ஜனவரி 22 | கடுவளை |
| திரு. நடேசபிள்ளை வகீசன் | ஜனவரி 22 | பொத்துவில் |
| திரு. ரி.லெம்பேர்ட் | ஜனவரி 23 | மன்னார் |
| திரு. விராஜ் விதுரங்க | ஜனவரி 23 | மஹியங்கனை |
| திரு. தர்மரத்னம் மணிவானன் | ஜனவரி 23 | யாழ்ப்பாணம் |
| திரு. செல்வா பரந்தன் | ஜனவரி 23 | நுரைச்சோலை |
| திரு. உதயசிறி ரத்னாயக்க | ஜனவரி 24 | மொனராகலை |
| திரு. லெஸ்லி தயாலத் | ஜனவரி 24 | திருகோணமலை |
| திரு. திலிப் துசார | ஜனவரி 25 | நுவரெலியா |
| திரு. ரசிக்க பெரேரா | ஜனவரி 25 | நகரக்கிளை |
| திரு. மகே' பெரேரா | ஜனவரி 25 | பண்டாரகம |
| திரு. மஞ்சுள கொடிஆராய்ச்சி | ஜனவரி 27 | மாத்தளை |
| திரு. கிதக ஜயசிங்க | ஜனவரி 27 | வத்தளை |
| திரு. திலிப் வந்தன | ஜனவரி 27 | ஹம்பாந்தோட்டை |
| திரு. லக்மால் பீட்டர்சன் | ஜனவரி 27 | பதவியா |
| திரு. பிரபாத் இந்திக்கலால் | ஜனவரி 28 | கேகாலை |
| திரு. மஹில் முனசிங்க | ஜனவரி 28 | குருநாகலை |
| திரு. சானக்க சந்தருவன் | ஜனவரி 28 | கலவானை |
| திரு. ஜயலத் பர்ணாந்து | ஜனவரி 28 | மொரட்டுவை |
| திரு. சித்தும் சந்தருவன் | ஜனவரி 28 | வத்தளை |
| திரு. லக்ஸான் தயாவங்கஸ | ஜனவரி 29 | தலைமையகம் |
| திரு. அரவிந்த சந்தருவன் | ஜனவரி 29 | களுத்துறை |
| திரு. ஜனக்க சந்திரகுமார | ஜனவரி 29 | சிலாபம் |
| திரு. சரித் கவீஸ | ஜனவரி 29 | தலைமையகம் |
| திரு. இசுரு பிரசாத் | ஜனவரி 30 | மத்துகம |
| திரு. விஸ்வநாதன் சுகிர்தநாத் | ஜனவரி 30 | கல்முனை |
| திருமதி. மரீனா சிஜானி | ஜனவரி 30 | பண்டாரகம |
| திரு. மதுசங்க மென்டிஸ் | ஜனவரி 30 | வத்தளை |
| திருமதி. உதாரி தர்மவர்தன | ஜனவரி 30 | தலைமையகம் |
| திரு. ரனுக கஜநாயக்க | பெப்ரவரி 01 | பதுளை |
| திரு. சோமசுந்தரம் நிரஞ்சன் | பெப்ரவரி 01 | வவுனியா |
| திரு. ஶ்ரீநாத் உதய குமார | பெப்ரவரி 01 | அம்பாறை |
| திரு. அசன்க விமலசூரிய | பெப்ரவரி 02 | தலைமையகம் |
| திரு. ஜோன்மேரி பிரதாபன் | பெப்ரவரி 02 | யாழ்ப்பாணம் |
| திரு. தாரக்க கலங்சூரிய | பெப்ரவரி 02 | ஜாஎல |
| திரு. வஜிர பிரதீப் | பெப்ரவரி 02 | தலைமையகம் |
| திரு. அனுர உடவத்த | பெப்ரவரி 03 | தலைமையகம் |
| திரு. சஞ்சீவ வீரசிங்க | பெப்ரவரி 03 | குருநாகலை |
| திரு. எனஸ்லி பெர்ணாந்து | பெப்ரவரி 04 | தலைமையகம் |
| திரு. ரொஹான் பெரேரா | பெப்ரவரி 04 | வத்தளை கிளை |
| திரு. விமுக்தி சந்தகெலும் | பெப்ரவரி 04 | கம்பஹா |
| திரு. ரவீந்திர அத்தநாயக்க | பெப்ரவரி 04 | நாவலப்பிட்டி |
| திரு. அஜித் ருவன்குமார | பெப்ரவரி 04 | நேதுன்கனே |
| திரு. இந்திக சுனிமல் | பெப்ரவரி 05 | மொனராகலை |
| திரு. நாமல் பு'பகுமார | பெப்ரவரி 05 | மொரட்டுவை |
| திரு. சஞ்சீவ பிரியதர்'ன | பெப்ரவரி 05 | நுரைச்சோலை |
| திரு. அமித் கவிசிங்க | பெப்ரவரி 05 | இரத்தினபுரி |
| திரு. அகில மதுசங்க | பெப்ரவரி 05 | மஹியங்கனை |
| திரு. சஞ்சீவ நி'ாந்த | பெப்ரவரி 06 | கம்பஹா |
| திருமதி. மகேஸி உதயகுமாரி | பெப்ரவரி 06 | கந்தளாய் |
| திரு. தினே' பத்மால் | பெப்ரவரி 06 | தலைமையகம் |
| திரு. ரமே' மதுரங்க | பெப்ரவரி 06 | ஹோமாகம |
| திரு. எஸ்.எம். சந்திரசேன | பெப்ரவரி 07 | அம்பாறை |
| திரு. முதித் சுரங்க | பெப்ரவரி 07 | இரத்தினபுரி |
| திரு. பியும் சாமர | பெப்ரவரி 07 | ஹம்பாந்தோட்டை |
| திரு. தேவராஜ் ஜயகுமார் | பெப்ரவரி 07 | நுவரெலியா |
| திரு. ஜீ. உதயகுமார் | பெப்ரவரி 08 | தலைமையகம் |
| திரு. ஜீவன் வீரவர்தன | பெப்ரவரி 08 | பலாங்கொடை |
| திரு. சானக்க மதுசங்க | பெப்ரவரி 08 | தலைமையகம் |
| திரு. லஹிரு பண்டார | பெப்ரவரி 08 | பொலன்னறுவை |
| திரு. கே. பிரசாத் | பெப்ரவரி 08 | முல்லைத்தீவு |
| திரு. பந்துல பத்மகுமார | பெப்ரவரி 09 | நுவரெலியா |
| திரு. சாஹர அத்துகொரலை | பெப்ரவரி 09 | குருநாகலை |
| திரு. சானக்க குமார | பெப்ரவரி 10 | நீர்கொழும்பு |
| திரு. பிரியந்த ஜயசிங்க | பெப்ரவரி 10 | காலி |
| திரு. கபில குமார | பெப்ரவரி 10 | நிட்டம்புவ |
| திரு. மகே'வரன் அனோஜன் | பெப்ரவரி 10 | முல்லைத்தீவு |
| திரு. நிவந்தக சமீர | பெப்ரவரி 11 | அவிஸ்ஸாவளை |
| திரு. சஜித் ஜயமான்ன | பெப்ரவரி 11 | அம்பலாங்கொடை |
| திரு. கந்தசாமி பிரபாகரன் | பெப்ரவரி 12 | நுவரெலியா |
| திரு. அசங்க குமார | பெப்ரவரி 12 | மொரவக்க |
| திரு. பரஞ்சோதி உமாகாந்தன் | பெப்ரவரி 12 | கல்முனை |
| திரு. மனோஜ் விஜேசிங்க | பெப்ரவரி 13 | நிட்டம்புவ |
| திரு. ஹர்ஸ சரித் | பெப்ரவரி 14 | வெலிமடை |
| திரு. திலுக சஞ்சீவ | பெப்ரவரி 14 | வெலிமடை |
| திரு. நுஷான் மதுசங்க | பெப்ரவரி 14 | பெலியத்தை |
| திரு. மஞ்சுள குமார | பெப்ரவரி 15 | தலைமையகம் |
| திரு. சுசந்த குமார | பெப்ரவரி 15 | அநுராதபுரம் |
| திரு. பிரதீப் டயஸ் | பெப்ரவரி 15 | தலைமையகம் |

மெஹெவர
பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்
இல. : 168, நாவல வீதி, நுகெகொடை
தொலைபேசி: 0112176262 பெக்ஸ் : 0112825843
மின்னஞ்சல்: manjula.p@primegrameen.lk
இணையம்: www.primegrameen.com
பணிப்பாளர்: சமிந்த பிரபாத் (முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர்)
பிரதம ஆசிரியர்: மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
பக்க வடிவமைப்பு: கே.டி. ஷமில சிந்தக (அர்ஜுன கிராபிக்ஸ் (தனியார்) நிறுவனம்
கணணி தட்டெழுத்து உதவி: உதாரி தர்மவர்தன / உதார தனஞ்சய
படப்பிடிப்பு: லக்ஷ்மன் குமாரதுங்க

**வாரத்திற்கு ஒரு தடவை குடும்ப அங்கத்தவர்களுடன் கலந்துரையாடுங்கள்**